அவை இருக்கின்றன. எனவே இப்படிப்பட்ட பெரியவர்களின் பெயர்களை வைக்கும்போது நல்ல இடங்களாகப் பார்த்து வைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: எந்தக் குற்றமும் நடைபெருத இடத்தில் அவர்கள் பெயர்கள் இருக்க வேண்டுமென்று தேடிப் பிடித்து வைப்பது என்பது அவ்வளவு எளிதான ஒன்றல்ல. ஆகவே, அந்தப் பெயர்களைத் தூய்மைப்படுத்துகிற அளவிற்கு அப்படிப்பட்ட குற்றங்களை அந்தந்த இடங்களிலிருந்து அகற்றும் முயற்சியில் ஈடுபடலாமே தவிர பெயர்களை மாற்றும் முயற்சியில் ஈடுபடுவது வெற்றி பெருது.

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பேரூராட்சிகள்

***819 வினு—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் அண்மையில் நகராட்சியாக மாற்றப்படவிருக்கும் பேரூராட்சி மன்றங்கள் எவையேனும் உள்ளனவா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) சீர்காழி பேரூராட்சியை நகராட்சியாக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். கணேசன்: தலைவரவர்களே, தஞ்சை மாவட்டம், தரங்கம்பாடி பேரூராட்சியிடமிருந்தும், பொதுமக்களிடமிருந்தும், அந்தப் பேரூராட்சியை டவுன்ஷிப்பாக மாற்ற வேண்டுமென்று கோரிக்கை வந்துள்ளதா? ஆமெனில், அதன் மீது அரசு என்ன நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அது பற்றிய செயற்குறிப்பு ஒன்றும் அரசுக்கு வந்து சேரவில்லை.

வந்தவாசி—சேதாரகுப்பம் சாலையில் பாலம்

***820. வினு—திரு. கே. எ. வகாப்:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

வந்தவாசி ஒன்றியத்தில், வந்தவாசி சேதாரகுப்பம் சாலை, மைல் 1/1 என்ற இடத்தில் பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

[1972 எப்ரல் 1

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, ஒன்றியத் தலைவராலும், மாவட்ட ஆட்சித் தலைவராலும் சிபார்சு செய்யப்பட்டு வந்திருக்கிறது. அந்த இடத்தில் பாலம் அமைப்பதாலே பத்து கிராமங்களுக்குத் தொடர்பு ஏற்படும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அதை அரசு பரிவுடன் ஆலோசித்து, அந்த ஒன்றியத்திற்கு மானியம் வழங்கி அந்தப் பாலத்தை கட்டிக் கொடுக்க முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : குறிப்பிட்ட அந்த இடத்தில் பாலம் கட்ட ரூ. 50,000 செலவாகும் என்று கூறப்படுகிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டப் பட்டியலில் அந்தப் பாலம் கட்டுவது இடம் பெறவில்லை என்று சொல்கிறார்கள். இதர சாலைகள் என்ற வேலையின் கீழ் எடுத்துக் கொள்ளலாம் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். இதர சாலைகளின் கீழ் ரூ. 190 லட்சம் ஒதுக்கப்பட்டிருந்தாலும், ரூ. 220 லட்சத்திற்கு மேல் செலவழிக்கப்பட்டு விட்டது. ஆகவே, இப்போது இருக்கிற ஒதுக்கீட்டில் அதற்கு நிதி ஒதுக்குவதற்கு இல்லை. நிதி வசதி ஏற்படுகிறபோது அது சாத்தியமானால் எடுத்துக் கொள்ளலாம் என்று தலைமைப்பொறியாளர் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அரிசனங்களுக்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள்

* 821 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், வயலூர் கிராம தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலைமையில் உள்ளது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, என்னுடைய தொகுதியில் உள்ள வயலூர் கிராம மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்க வேண்டுமென்று நான்கு ஆண்டுகளாகக் கோரிக்கை எழுப்பி வருகிறேன். இப்போது இல்லை என்ற பதில் வருகிறது. இதை மறுபரிசிலனை செய்து இனிமேலாகிலும் உண்டு, நிறைவேற்றித் தருகிறோம் என்ற பதிலை எதிர்பார்க்கலாமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அந்த இடத்தில் ஏற்கெனவே ஒரு குடி தண்ணீர்க் கிணறு இருக்கிறது. அதை ரிப்பேர் செய்வதற்கு ரூ. 3,000 வேண்டு மென்று கேட்கப்பட்டது. அது கொடுக்கப்பட்டிருக்கிறது. கிணறு இல்லை யென்றால், கிணறு கட்டுவதற்கும் வேறு பல குடிதண்ணீர் வசதி செய்து